# அரும்பாக்கம், நேரு பூங்கா மெட்ரோ நிலையங்களில் சீருந்து இணைப்பு சேவை அறிமுகம்

சென்னை, செப். 27: அரும்பாக்கம், நேரு பூங்கா ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் சீருந்து இணைப்பு சேவை வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சேவை சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், அண்ணாநகர் கோபுரம் ஆகிய 3 மெட்ரோ ரயில் நிலையங்களில் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்த

பிறகு, விமானநிலையம்-வண்ணாரப்பேட்டை வரையும், சென்ட்ரல்-பரங்கிமலை வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி சராசரி 98 ஆயிரம் பேர் பயணம் செய்கின்றனர். சென்னையில் மொத்தம் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளன.

இந்த மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காக ஷேர் ஆட்டோ மற்றும் கார் சேவைகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் கடந்த ஆண்டு ஆகஸ்டில் அறிமுகப்படுத்தியது.

அதன்படி,ஷேர் ஆட்டோ சேவையில் மாதத்துக்கு 20 ஆயிரம் பேரும், கார் சேவையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் பயணம் செய்து வருகின்றனர்.

இதற்கிடையில், சென்னை சென்ட்ரல், நந்தனம், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு, ஏஜி டி.எம்.எஸ். ஆகிய 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் சீருந்து இணைப்பு சேவை கடந்த மாதம் 5-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தசேவை போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக செயல்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட நிலையங்களில் இருந்து 6 முதல் 8 கிலோ மீட்டர் வரையில் ரூ.10 கட்டணத்தில் இந்த சேவை வழங்கப்படுகிறது.

இந்த சேவையை விரிவுப்படுத்தும் நோக்கில், வண்ணாரப்பேட்டை, விமானநிலையம், ஷெனாய்நகர், நங்கநல்லூர் ஆகிய 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் சீருந்து இணைப்பு சேவை 2-ஆம் கட்டமாக தொடங்கப்பட்டது. இந்த 4 மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு வந்து செல்லும் பயணிகள் சீருந்து இணைப்பு சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், அரும்பாக்கம், நேரு பூங்கா ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் மூன்றாம் கட்டமாக சீருந்து இணைப்பு சேவை வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது. பயணிகள் வசதிக்காக இந்த வசதி தொடர்ந்து விரிவுப்படுத்தப்பட்டு வருகிறது.

சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், அண்ணாநகர் கோபுரம் ஆகிய மெட்ரோ ரயில நிலையங்களில் சீருந்து சேவை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.